விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான
பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-4078)
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 295 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை (10.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தகவல்களை வெளியிடக்கூடாது

### சபையில் நீதி அமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புத் தொடர்பான விசாரணைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆகையால் அது தொடர்பான தகவல்களை வெளியிடக் கூடாது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (09) ஈஸ்டர் ஞாயிறு

15ஆம் பக்கம் பார்க்க

## "அணையா விளக்கு" தூபி விசமிகளால் உடைப்பு





15ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர் ஜமுனானந்தாவுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மருத்துவர் ஜமுனாநந்தாவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளராக இன்று

15ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாத் தீர்மானத்துக்கு முன்னைய அரசுகளே காரணம்

# தேசிய பிரச்சினையை முறையாக நிர்வகிக்கவில்லை

### பாராளுமன்றில் அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

தேசிய பிரச்சினையை முறையாக நிர்வகிக்காத முன்னைய அரசாங்கங்களே இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்துக்குக் காரணம் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலோலியில் வீதி விபத்து

### இருவர் படுகாயம்

(கரணவாய்)

புலோலி சாரையடிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (09) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர்

15ஆம் பக்கம் பார்க்க

## அனலைதீவு, நயினாதீவுக்கு மருத்துவப் படகு

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனலைதீவுக்கான மருத்துவப் படகு அடுத்த ஆண்டும் நயினாதீவுக்கான மருத்துவப் படகு 2027ஆம் ஆண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் பிரதிநிதிகள், மத்திய சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு, தலைமன்னாரில்

### அத்துமீறிய 47 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மற்றும் தலைமன்னார் பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 47 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்கு அருகே 17 இந்திய மீனவர்களும் நேற்றுத் தலைமன்னாரில் 30 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 5 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மன்னாரில் கைது செய்யப்பட்ட 30 மீனவர்கள் கடற்படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் கழிவுகளை கொட்ட வந்தவர்களுடன் முரண்பட்ட

### 8 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கழிவுகளைக் கொட்ட வந்தவர்களை மறித்து அடாவடியில் ஈடுபட்டார்கள் என குற்றம் சாட்டி 8 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலைப் பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம்

15ஆம் பக்கம் பார்க்க

## குருக்கள்மடம் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குருக்கள் மடம் புதைகுழி தொடர்பான வழக்கானது எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்

15ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றில் வாணி விழா



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க அறிவித்தல்
## ஆதன உரிமை வெளிப்படுத்தல்

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவு சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வரணி, கோவில்பற்று, கரம்பைக்குறிச்சி இறை கரம்பைக்குறிச்சி கிராம சேவகர் பிரிவு **J/342 "திக்கில் தோப்பு"** நிலப்பரப்பு பத்து (10) இதில் சொரியலாக 22/24 பங்கு இச்சொரியல் ஆதனம் ஏனைய சொரியல் பங்குதாரர்களுடன் மனமொத்து நிந்தமாக்கப்பட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.தியாகராசா அவர்களால் 04.05.2024 ஆம் திகதியன்று 481 ஆம் இலக்கத்தில் அளந்து விஸ்தரிக்கப்பட்ட நிளஅளவைப்படத்தில் துண்டு 01 என விஸ்தரிக்கபட்டுள்ள நிலப்பரப்பு 09 குளி 03 இதன் எல்லைகள் கிழக்கு சிறீதரன் தேவகுமாரிக்குரிய ஆதனம் வடக்கு சின்னத்தம்பி அம்பலவாணருக்குரிய ஆதனம் தெற்கு சிறீதரன் தேவகுமாரிக்கும் பங்களாருக்குரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும் மேற்கு வேலுப்பிள்ளை சின்னத்துரைக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலும் அதற்கு சேர்ந்தவைகளனைத்தும்

மேலே விபரிக்கப்பட்ட ஆதனமானது யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு பொ.கார்த்திகேசு முகதாவில் 25.03.1986 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 10934 ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படியும் பொ.கார்த்திகேசு முகதாவில் 28.09.1991 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 15170 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படியும் பொ.கார்த்திகேசு முகதாவில் 15.10.1987 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 12438 ஆம் இலக்கத்தில் முடிந்த உரித்தழித்தல் உறுதிப்படியும் தமது சொந்தமும் ஆட்சியும் உடையதென்றும் வீரகத்தி சிறீதரன் மற்றும் பெண் தேவகுமாரிக்கும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் கந்தையா சதீஸ்வரன் முகதாவில் 08.05.2024 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 1237 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி முடிக்கப்பட்டு இடைக்குறிச்சி கிழக்கு வரணியைச் சேர்ந்த **பாலசுந்தரம் ஞானநிறோசன்** அவர்களுக்கு 08.01.2025 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 1562 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதிப்படி வந்தடைந்துள்ளது.

இவ் ஆதனத்திற்கு பாலசுந்தரம் ஞானநிறோசன் என்பவர் உடைமைச்சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் உரிமை தொடர்பாக ஆட்சேபனை இருப்பின் அதனை பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்பட்டுள்ள ஆவணங்களுடன் பதிவுத்தபால் மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது உரிமை கோரவோ எவரும் இல்லையெனின் சாவகச்சேரி பிரதேசசபையால் **பாலசுந்தரம் ஞானநிறோசன்** என்பவருக்கு குறித்த ஆதனத்திற்கு உடைமைச்சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இவ் ஆதன உடமை மாற்றம் தொடர்பான எவ்விளைவுக்கும் சாவகச்சேரி பிரதேசசபை பொறுப்பாகமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொன்னையா குகதாசன்**
**தவிசாளர்**
**சாவகச்சேரி பிரதேசசபை**

(C-4075)

# ரணில் - சஜித் சங்கமம் நேற்று ஊர்ஜிதமானது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஒரு பொதுவான வேலைத் திட்டம் அல்லது செயற் திட்டத்தில் அரசியல் ரீதியாக ஈடுபட ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் ஒருமனதாக எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளிப்பட்டுள்ளனர். (ம-7)


**தொடர்பு கொள்ளவும்**

வீடு துப்பரவு செய்து
பராமரிப்பதற்கு
வேலையாள் தேவையா?
என்னைத் தொடர்பு கொள்ளவும்.
**076 139 7467**

(5621)



## வலி கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## கூறுவிலை கோரல்

வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக கூரை வேலை செய்தல் மற்றும் வர்ணம் தீட்டுவதற்கான கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைப் படிவங்களை சங்க தலைமையகத்தில் பெற்று பூரணப்படுத்தி **"பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி"** எனும் முகவரிக்கு தபால் மூலமோ அன்றேல் நேரிலோ அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 21.10.2025 நண்பகல் 12.00 மணி**
**விண்ணப்பப்படிவ கட்டணம் : ரூபா.1000.00**
**மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் : ரூபா.10000.00**

**நீர்வேலி**
**10.10.2025** (5618) **பொது முகாமையாளர்**

# வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.09.2025 புதன்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் நடராசா வசந்தாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 10.10.2025 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி சந்நிதி புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று வருகை தரவும்.

சாத்தியத் தோட்டம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-4074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் உறுதிப்படத் தெரிவித்தார் அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

**எதிர்வரும் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார்.**

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மாகாண சபைத் தேர்தல் மற்றும் தேர்தலின் எல்லை நிர்ணயம் தொடர்பில் விஜித ஹேரத் திடம் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், " மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஆண்டில் நிச்சயமாக நடத்தப்படும். பழைய முறைமையிலா அல்லது புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்படுமா என்பது தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்படும்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் பாராளுமன்றம் தீர்மானிக்கும்" என தெரிவித்துள்ளார். (ஙி)

## சாதாரணதரப் பரீட்சையின் மீள்திருத்த முடிவுகள் வெளியீடு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள் திருத்தம் செய்யப்பட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளங்க ளான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk இற்குச் சென்று, பரீட்சை எண் அல்லது தேசிய அடையாள அட்டை எண்ணை உள்ளிடுவதன் மூலம் முடிவுகளைப் பார்வையிடலாம் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. (ஙி)

## இலங்கைக்கு 347 மில்லியன் டொலர் கடன் வழங்கும் சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம்-இலங்கை இடையிலான கடன் வசதி திட்டத்தின் 5ஆவது தவணைக்கு ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள் ளது. இதற்கான அனுமதி வழங்கப்பட்டதையடுத்து இலங்கைக்கு 347 மில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது.

ஊழியர் மட்ட இணக்கப்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அனுமதி கிடைத்தற்கு பின்னர் குறித்த கடன் வசதி இலங்கைக்கு கிடைக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித் துள்ளது. (ஙி)


# INVITATION FOR BIDS (IFB) - 2025/05 URBAN COUNCIL, CHAVAKACHCHERI COUNCIL FUND

1. The **Chairman, Procurement Committee,** on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025.10.10 until 2025.10.27 from 09:00 hrs to 14:00 hrs.**
4. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below. " **Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman/ Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0498, 021 227 0041 Fax No: 021 227 0079) during the period from 2025.10.10 until 2025.10.27 from 09:00 hrs to 14:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri at or before 10.30 hrs, 2025.10.28** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri** commencing at **11.30 am on 2025.10.17**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025.10.10 until 2025.10.27** |
| **Pre-Bid Conference** | **At 11.30 A.M on 2025.10.17** |
| **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 2025.10.28** |

| S No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security/Bank Draft/Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | Security Amount | Validity Period | |
| 01 | NP/14/41(3)/2/CF/15/2025 | Renovation of public vegetable market & fish market building work phase - II | Council Fund | 5.683 | 63 Days | C8& Above (Buildings) | 2000 | 57,000.00 | 10.02.2026 | 77 Days |
| 02 | NP/14/41(3)/2/CF/16/2025 | Construction of internal Development works Town park at Nunavil | Council Fund | 3.813 | 63 Days | C9& Above (Buildings) | 2000 | 40,000.00 | 13.01.2026 | 49 Days |
| 03 | NP/14/41(3)/2/CF/17/2025 | Reconstruction of Annamar road (Thambothoddam Back side road ) at Kovitkudijiruppu<br>Reconstruction of Sappachimavadi pillaiyar road at Sangaththanai | Council Fund | 2.935 | 49 Days | C9& Above (Roads) | 2000 | 30,000.00 | 13.01.2026 | 49 days |

2025.10.10

Chairman,
Procurement Committee Urban Council.
Chavakachcheri.

(C-4072)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் ஒருநாள் தொடர்; முதல் வெற்றியைப் பதிவு செய்த ஆப்கானிஸ்தான்




ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் அபுதாபியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.5 ஓவரில் 221 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அணித்தலைவர் மெஹிதி ஹசன் மிராஸ் 60 ஓட்டங்களும் தவ்ஹித் ஹ்ரிடோய் 56 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஆப்கானிஸ்தான் சார்பில் ஓமர்சாய், ரஷித் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து, 222 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் குர்பாஸ், அஹமத் ஷா ஆகியோர் அரைச்சதம் அடித்து ஆட்டமிழந்தனர்.

கடைசிக் கட்டத்தில் அஷ்மத்துல்லா ஓமர்சாய் 40 ஓட்டங்கள் எடுத்தார்.

ஹஷ்ம துல்லா ஷாஹிடி 33 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 47.1 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 226 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் ஒருநாள் தொடரில் ஆப்கானிஸ்தான் 1- 0 என முன்னிலை பெற்றுள்ளது.

ஏற்கனவே நடந்த 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை பங்களாதேஷ் 3-0 எனக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (3)


# INVITATION FOR BID - 2025 / 13
## VALIKAMAM EAST PRADESIYA SABHA NORTHERN PROVINCE

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Stamp Duty.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below. "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025.10.10 To 2025.10.27** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur** (T. P:021 205 8865, e.mail: pmdveps @ gmail.Com) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025-10-10 To 2025-10-27 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-10-17 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02.00 P.M on 2025-10-28 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| SD/NP/JAF/VEPS/2025/01 | Construction of shopping complex at puttur public Market | 7.88 | 105 | C8 or above (Building) | 3,500.00 | 79,000.00 | 10.02.2026 | 77 |
| SD/NP/JAF/VEPS/2025/02 | Reconstruction of Pokkanai Road at urelu. | 6.94 | 63 | C8 or above (Highway) | 3,500.00 | 70,000.00 | 10.02.2026 | 77 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha,**
**Puttur**

(C-4076) 10.10.2025


# கால்பந்து உலகின் முதல் பில்லியனர்; வரலாறு படைத்த ரொனால்டோ

கால்பந்து உலகில் எல்லா காலத்திலும் சிறந்த வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, 'பில்லியனர்' என்று பெயரிடப்பட்ட உலகின் முதல் கால்பந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

சவுதி புரோ லீக்கில் அவர் விளையாடும் அல்-நாசர் கழகத்துடன் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் ரொனால்டோ இந்த மைல்கல்லை எட்டினார்.

ப்ளூம்பெர்க் அறிக்கையின்படி அவரது நிகர சொத்துமதிப்பு, 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 40 வயதாகும் ரொனால்டோ, ஐரோப்பாவில் கால்பந்து விளையாடிய 2002 மற்றும் 2023 இற்கு இடையில் 550 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குமேல் சம்பளம் பெற்றதாக அறிக்கை கூறுகிறது.


பிராண்ட் ஒப்புதல்களைப் பொறுத்தவரை, ஒரு தசாப்த காலனைக் ஒப்பந்தம் மூலம் ரொனால்டோ ஆண்டு தோறும் 18 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதாகவும் அர்மானி மற்றும் காஸ்ட்ரோல் போன்ற பிராண்டுகளுடனான பிற ஒப்புதல்கள் மூலம் அவரது நிகர மதிப்புக்கு 175 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கிடைப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

2023 இல் அல்-நாசரில் சேர்ந்ததிலிருந்து ரொனால்டோ ஆண்டுதோறும் சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வரி இல்லாத சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவாக சம்பாதித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தில் 30 மில்லியன் அமெரிக்க டொலர் கையொப்ப மேலதிகக் கொடுப்பனவும் அடங்கும்.

அவரை பில்லியன் டொலர் மதிப்பிற்கு மேல் உயர்த்திய ஒப்பந்தம், 2025 ஜூன் மாதம் அல்-நாசருடன் கையெழுத்திட்ட ஒப்பந்த நீட்டிப்பு என்று கூறப்படுகிறது.

இது தவிர, சமூக ஊடகங்களில் ஒப்பிடமுடியாத ஆதிக்கம் (660 மில்லியனுக்கும் அதிகமான இன்ஸ்டாகிராம் பின்தொடர்பவர்கள்) மூலமாகவும் உலகின் அதிக வருமானம் ஈட்டும் விளையாட்டு வீரர்களில் ஒருவராக அவரை மாற்றியுள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்க பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் **SBD -03** இல் தரவு அட்டவணை **(Schedule)** இலும் **SBD – 01** இல் **Bidding Data** இலும் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவண மொன்றை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2025.10.10 ஆம் திகதியிலிருந்து 2025.10.23 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 01 - 10 வரையான தொடரிலக்கமுடைய வேலை களிற்கு **ரூபா. 3,000.00** உம் இலக்கம் 11 தொடரிலக்கமுடைய வேலைக்கு **ரூபா. 6,000.00** உம் (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2025.10.24** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2025.10.17** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் **மு. ப.10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதரரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025.10.10 - 2025.10.23** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2025.10.17** |
| **Closing and Opening of Bid** | **At 10.00A.M on 2025.10.24** |

| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NPS/2025/CF-III/Pac/01 | Renovation of Roads Package – 01 (Gnanaveera 1st Lane, Vivekananda Road, Upumadam Pillayar Kovil Veethy) | 3.26 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 48,900.00 | 2026.01.23 |
| 2 | NPS/2025/CF-III/Pac/02 | Renovation of Roads Package – 02 (Sebastiyar Veethy, Kulamkarai by Lane) | 3.97 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 59,550.00 | 2026.01.23 |
| 3 | NPS/2025/CF-III/Pac/03 | Renovation of Roads Package – 03 (Varagi Amman Community Centre Road, Inkaran Veethy, Champian Lane by Lane, Old Post Office by Lane) | 2.49 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 37,350.00 | 2026.01.23 |
| 4 | NPS/2025/CF-III/Pac/04 | Renovation of Roads Package – 04 (Sabapathy Veethy by Lanes, Nethage Community Centre Front Lane) | 4.46 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 66,900.00 | 2026.01.23 |
| 5 | NPS/2025/CF-III/Pac/05 | Renovation of Roads Package – 05 (New Chemmany Road Left side 1st Lane, New Chemmany Road Right side 1st Lane, Murgan Veethy by Lane, Ramakrishna Veethy by Lane, Poncity Veethy Balance Work, Kaddaiyalady Veethy by Lane) | 4.67 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 70,050.00 | 2026.01.23 |
| 6 | NPS/2025/CF-III/Pac/06 | Renovation of Macadam Roads Package – 06 (Ariyalai East by Lane-Near School, Amman Veethy by Lane) | 3.11 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 46,650.00 | 2026.01.23 |
| 7 | NPS/2025/CF-III/Pac/07 | Renovation of Roads Package – 07 (Muthaliyar Thoddam by Lane 1, Muthaliyar Thoddam by Lane 2) | 3.00 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 45,000.00 | 2026.01.23 |
| 8 | NPS/2025/CF-III/Pac/08 | Maintanance of Roads Package – 08 (Re – Tarring Work) (Thilayampathy Veethy , CCTMS Veethy, Arasady Veethy & By Lanes, CEKO Lane, KKS by Lane-Post Office Front, Chandrasegara Pillaiyar Road, Kodukinaru Veethy, Nanthavil Lane) | 3.17 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 47,550.00 | 2026.01.23 |
| 9 | NPS/2025/CF-III/Pac/09 | Construction of Concrete Path Package – 09 (Barathy 3rd Path, Barathy 6th Path, Vivekananda By Path, Manchavanapathy By Path, Varaki Amman By Path, Adaikkalanayaky Lane By Path) | 4.72 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 70,800.00 | 2026.01.23 |
| 10 | NPS/2025/CF-III/Pac/10 | Construction of KKS Road 2nd Cross Lane Culvert at Kondavil Package – 10 | 1.73 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 25,950.00 | 2026.01.23 |
| 11 | NPS/2025/CF-III/Nav.Ro./11 | Renovation of Navalady Uthayapuram Joint Road Ward 12 | 11.67 | 77 Days | C7 & above (Road) | 77 Days | 175,050.00 | 2026.02.06 |

**தலைவர்,**
பிரதேச பெறுகைக்குழு,
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**
**2025.10.10**

(C-4071)

# ரணில்-மனோ அவசர சந்திப்பு


(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை குழுவினர் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு ரணில் விக்கிரமசிங்கவின் ஃப்ளவர் வீதி அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ரஷ்யா செல்ல உள்ளதால் இந்தச் சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரி விக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்ட உள் ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஒத்து ழைப்பது பற்றி உரையாடல் இடம்பெற்றதாக கூட்டணி தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம் பரம், வே.இராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு அபாய வலயங்களாக யாழ்ப்பாணம், வவுனியா அடையாளம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவித்தார்.**

மாகாண ரீதியில் பூச்சியியல் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தத் தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மாகாணத்தில் பல இடங்களில் டெங்கு நுளம்புக்கான குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால் நுளம்புக் குடம்பிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதன் அடிப்படையில் டெங்குக் காய்ச்சல் பரவ ஆரம்பித்தால் அதன் தாக்கம் சடுதியாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக அவர் எச்சரித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களே அதிக அபாயமிகுந்த வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் வாரத்திற்கு ஒரு முறையேனும் தமது சுற்றுச் சூழலைத் துப்பரவாக்கி, சிறந்த சுகாதார முறையைப் பேணுமாறு, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# இராமர் பாலத்தைக் கண்டுகளிக்க விரைவில் படகு சேவை

(மன்னார்)

**தலைமன்னார் கிராமத்தில் இருந்து தீடைப்பகுதியில் இராமர் பாலம் வரை சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுவதற்கான படகுச் சேவை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இராமர் பாலத்தைப் பார்க்க வரும் சந்தர்ப்பத்தில் படகுச் சேவை ஒன்றை முன்னெடுக்க மன்னார் மக்கள் கோரிக்கை முன் வைத்ததுடன் அரசமட்ட தரப்பிலும் குறித்த கோரிக்கை, பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு படகு சேவை மேற்கொள்ள முடிவுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கான அனுமதி பெறப்பட்டு படகு சேவையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் படகு சேவைக் கட்டண வசூலிப்பை வன ஜீவராசிகள் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது. குறித்த நடவடிக்கை தொடர்பாக மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் உட்பட உறுப்பினர்களுடன் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் அரசாங்க அதிபரின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

படகு சேவைக்கான கட்டண வசூலிப்பை 50 இற்கு 50 என்ற அடிப்படையில் வன ஜீவராசிகள் திணைக்களமும் மன்னார் பிரதேச சபையும் செயற்பட்டு சுற்றுலாப் பயணிகள் சேவையை நடைமுறைப்படுத்தலாம் எனத் தெரிவித்து இதர வருமானங்களை மன்னார் பிரதேச் சபை திட்டங்களை வகுத்து செயற்படுத்தலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்ட தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் உறுப்பினர் மற்றும் சில உறுப்பினர்கள் மன்னார் பிரதேச சபை கடற்கரை பூங்காவை நீண்ட நாட்களாக பராமரித்து வரும் நிலையில் மன்னார் பிரதேச சபையின் வருமானம் மிகக்குறைவானது என்றும் இன்னும் பல்வேறு காரணங்களை வலியுறுத்திப் படகு சேவைக்கான நிதி வசூலிப்பை தமக்கு தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் அவ்வாறு செயற்பட முடியாது. வன ஜீவராசிகள் திணைக்களம் பல்வேறு இடங்களில் இவ்வாறான சுற்றுலா நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தமக்கு உட்பட்ட பகுதியில் குறித்த கடற்கரைப் பூங்கா காணப்படுவதனால் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அதிகாரி பாத்தியா மடுகல்ல தெரிவித்தார்.

இதன்போது மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் குறித்த கருத்தை ஆதரித்தும், கலந்து கொண்ட உறுப்பினர்கள் சிலர் மன்னார் பிரதேச சபை நிதி தொடர்பில் அதிருப்தி குறித்தும், தற்போது இவ்வாறான கருத்தை தாம் அனுமதிக்க முடியாது என்றும், பல்வேறு தரப்பினரிடம் ஆலோசனை கருத்தை நாங்கள் முன் வைத்து பிரிதொரு நாளில் இக்கூட்டத்தை நடத்தி குறித்த தீர்மானத்தை முன்னெடுக்கலாம் என தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானத்தை எடுக்கலாம் என்று கூறி அரசாங்க அதிபர் கூட்டத்தை நிறைவு செய்தார். (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 300 | 220 | 300 | 350 |
| தக்காளி | 200 | 200 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 300 | 150 |
| கோவா | 180 | 180 | 200 | 200 |
| கரட் | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 150 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 450 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 160 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 250 | 200 |
| கீரை – 1 பிடி | 140 | 80-150 | 150 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1250 | 1600 | 2400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 220 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 1100 | 1200 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 600 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 250 |

# காரைநகர் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் காரைநகர் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவையானது காரைநகர் பிரதேச செயலாளர் ந. ரஞ்சனா தலைமையில் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலர் பிரதீபன் கலந்து கொண்டதுடன், காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணன் கோவிந்தராசன், மாவட்ட மேலதிக செயலர் கே. சிவகரன், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், காரைநகர் பிரதேசசபைச் செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 14.10.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு 44 டிப்பர் மணல், 1 டிப்பர் கிரவல், 2 டிப்பர் கருங்கல் தூள், 59 துவிச்சக்கர வண்டிகள், பாத்திரங்கள், அலுமினியங்கள், இரும்புகள், பிளாஸ்ரிக் பரல்கள் என்பன ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது எனப் பதி வாளர் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் "மாறுபாடில்லா உண்டி" எனும் நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வேளாண்மை செயற்பாட்டாளர் சி.கஜிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையினை சிவகுரு ஆதீனத்தின் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் நிகழ்த்த வுள்ளதுடன் நூல் அறிமுகவுரையினை முத்துக்குமார் நிமியா (யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை) நிகழ்த்த வுள்ளார். (3)

# முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

புலோலி வடகிழக்கு முதியோர் சங்கத்தின் முதியோர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் முதியோர் சங்க தலைவர் இ.கிருபாகரசூரியன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ப.தயானந்தன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் வே.உதயமோகன் மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி வேணுகாண் சோபனா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் (வ.து) - கரவெட்டி

**பதிவு இலக்கம் -J/1553** **பதிவு திகதி - 16.02.1971**


**கிளைக்குழு உறுப்பினர் தெரிவு (12.10.2025) தொடர்பான அறிவித்தல்**

வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக எமது சங்கத்தின் புதிய கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கு கடந்த 13.09.2025இல் ஏற்பாடு செய்யப்பட்ட பின்வரும் விபரப்படியான கிளைப் பொதுக் கூட்டங்களை நிறைவெண் இல்லாததால் நடாத்த முடியவில்லை எனவே இக்கூட்டங்களை எதிர்வரும் 12.10.2025ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்டவிபரப்படியாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம் 30.06.2025ஆம் திகதியில் வாக்களிக்க தகைமை பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தமது கிளையின் பொதுக் கூட்டங்களுக்கு உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| இல | கிளை இல | கிளை விபரம் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு (A) (மாலிச்சந்தி) | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் | திரு சி.சிறீதரன் |
| 02 | 04 | கல்வத்தை | யா/நெல்லியடி மெ.மி.த.பாடசாலை | திருமதி பி.சுகிர்தா |
| 03 | 05 | கணுவில் | பிரதேச சபை (வட.தெ.மே) பாலர் பாடசாலை நெல்லியடி (கரவெட்டி பிரதேச வைத்தியசாலை அருகில்) | திரு அ.சஞ்சயன் |
| 04 | 13 | துன்னாலை தெற்கு (குடவத்தை) | கிளைக்கட்டிடம் | திரு பொ.கோகுலன் |
| 05 | 15 | வதிரி | கிளைக்கட்டிடம் | திரு ச.சுவர்ணன் |
| 06 | 16 | யார்க்கரு | யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் | திரு வ.நிதர்சன் |
| 07 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | வதிரி தமிழ் மன்றம் | திரு நா.ஜெயவதனன் |

**ஆறுமுகம் சங்கர்**
**பதில்செயலாளர்.**
**கட்.நெல்.ப.நோ.கூ. சங்கம்- கரவெட்டி.**
(C-4069)

# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் மீது சட்ட நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வரும் உணவகங்கள், வெதுப்பகங்கள் மீது தொடர்ச்சியாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகரசபை சுகாதார குழுவினர் இணைந்து பல்வேறு சட்டநடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மன்னார் மூர் வீதியில் இயங்கி வந்த உணகம் ஒன்று மன்னார் நகர சபை சுகாதார உத்தியோகஸ்தரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, தலையுறை,கையுறை அணியாமை, அதிகளவான ஈக்கள்,கழிவு நீர் உரிய முறையில் அகற்றப்படாமை, அசுத்தமான முறையில் உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் தயாரிக்கப்பட்டமை போன்ற பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த உணவகம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8-285)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை,சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**115/1, இந்துக் கல்லூரி வீதி, வட்டாரம் -11**

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11, இந்துக்கல்லூரி வீதியிலுள்ள இல: 115/1 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் முத்துக்குமாரு அம்பலவாணர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை ஆறுமுகம் திருநாவுக்கரசு ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.சிவஞானம் முகதாவில் 3457/01.02.1994ஆம் இலக்க உறுதியால் அம்பலவாணர் பொன்னம்பலம் ஆகியவரிடமிருந்து அவரது சீவிய உரித்திற்கமைவாக நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த அம்பலவாணர் பொன்னம்பலம் ஆகியவர் குறித்த ஆதனத்தை குறித்த 3457/01.02.1994ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசுவுக்கு நன்கொடை அளித்திருந்தார் எனவும், குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு ஆகியவர் 4 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 50,000/- பணத்தினை தனக்கு கைமாறாக தந்துதவியமையாலும், மேலும் பல சரீர உதவிகளைச் செய்தமையாலும், குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு மீது தான் கொண்டுள்ள அன்பின் மேலீட்டினால் குறித்த நன்கொடையை எவ்வித காரணங்கொண்டும் அழிக்கமாட்டார் எனவும், குறித்த ஆதனமானது குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு ஆகியவரின் சீவிய காலத்தின் பின் அவரது மனைவி அன்னபூரணத்தின் சீவிய உரித்திற்கமைவாக அவரது மகன் திருநாவுக்கரசு ஜெயபாலனுக்கு நிந்தமாகச் சேர வேண்டுமெனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் 16947/24.08.1994ஆம் இலக்கத்தில் அழியா நன்கொடையாகத் திருத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்.

நிகேஷ் பெண் நிருபா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் 539/26.10.2021 ஆம் இலக்க உறுதியால் திருநாவுக்கரசு ஜெயபாலனும், ஜெயபாலன் பெண் கமலாம்பிகையும், ஆறுமுகம் திருநாவுக்கரசுவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு.
பெயர்: **"கவடியொல்லை"**
இறை: **சங்கானை மேற்கு**
விஸ்தீரணம் : **நில.பர.இலா 6 குளி 14.55**
எல்லைகள் கிழக்கு-செல்லையா கைம்பெண் பாக்கியத்துக்கும் சண்முகநாதன் பெண் கமலாதேவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு இக்காணிக்கு போக்குவரவு செய்யவென விடப்பட்ட 8 முழ அகலமான ஒழுங்கையும், ஒழுங்கை முகப்பும், நடராசா கைம்பெண் சிவமணிநாயகத்தின் ஆதனமும், மேற்கு-அம்பலவாணர் பொன்னம்பலத்தினதும், அம்பலவாணர் மகாயோகதேவியின் ஆதனமும், தெற்கு தில்லையம்பலம் கனகசபையின் ஆதனம்

குறித்த நிகேஷ் பெண் நிருபா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குறித்த நிகேஷ் பெண் நிருபா ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்
Best Wishes



திரு.டேவிட்சன் ஜீவநாதன் நைல்ஸ்
ஆசிரியர் (SLTS-I)

சேவைக்கால விபரம்
• யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி 07.04.1998 - 31.08.2000
• பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.09.2000 - 14.05.2002
• யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி 15.05.2002 - 09. 01.2005
• யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க வித்தியாலயம் 10.01.2005-05.01.2006
• யா/ சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் 06.01.2006- 19.05.2013
• கிளி/ கிராஞ்சி அ.த.க. பாடசாலை 20.05.2013 -24.05.2015
• யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் 25.05.2015 -09.10.2025

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி 10.10.2025 இன்று ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியர் திரு D.J.நைல்ஸ் அவர்களை வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்.
யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
(5601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## கலிபோர்னியாவில் தீபாவளி தினம்

### விடுமுறை தினமாக அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலி போர்னியா மாகாணத்தில் தீபாவளி தினம் விடுமுறை பட்டியலில் சேர்க்கப்படு வதாகக் கலிபோர்னியா மாகாண ஆளுநர் கவின் நியூஸம் அறிவித்துள்ளார்.

சட்டமசோதா மூலம் உத்தியாகபூர்வமாக அறிவிக் கப்பட்டிருப்பதால் தீபாவளி தினத்தன்று கலி போர்னியா மாகாணத்தில் பாடசாலைகளுக்குப் பொது விடுமுறை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள ளது.

இதேவேளை அன்றைய தினம் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப் படும் எனவும்தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தீபாவளி பண்டி கையை, விடுமுறையாக அதிகாரபூர்வமாக அங்கீக ரித்த அமெரிக்காவின் மூன் றாவது மாகாணமாகும்.

ஏற்கனவே 2024 இல் பென்சில்வேனியாவும், 2025 இல் கனெக்டிகட் மாகாணங்கள் தீபாவ ளியை அரசு விடு முறை யாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்திருந்தன.


இந்த விடுமுறை மூலம் அரசு பொதுக் கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் நிறு வனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் ஊதியத் துடன் விடுமுறை வழங்க முடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

முன்னதாக கடந்த செப் ரெம்பர் மாதம் கலிபோர் னியாவின் சட்டப்பேர வையின் இரு அவை களிலும் தீபாவளியை அரசு விடுமுறையாக அறிவிக்கும் "ஏபி 268" என்ற சட்டமூலம் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் ஆளுநர் கவின் நியூசம் ஒப்புதலுக்கு அனுப்பி வைக் கப்பட்டது.

இந்நிலையில் தீபாவ ளியை அதிகாரபூர்வ விடு முறையாக அறிவிக்கும் "ஏபி 268" என்ற சட்ட மூலத் துக்கு கவின் நியூசம் ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட்டு ள்ளார்.


அதன்படி இனி அமெரிக் காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தீபாவளி தினம் விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது. (நி)



## காசா அமை

## இஸ்ரேல் - ஹம

## ஐ.நா வர



(வோஷிங்டன்)

இஸ்ரேல் - ஹ

பணயக் கைதிகளை

திட்டத்தின் முதல் க

கம் காணப்பட்டுள்

ஜனாதிபதி டொன

வித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலும், ஹமாஸும் முதற்கட்ட அமைதித்திட்டத்தில் கையெ முத்திட்டுள்ளன.

இருதரப்பிற்கும் இடை யேயான போர்நிறுத்தம் தொடர்பான பேச்சு வார்த்தை மும்முரமாக நடந்துவரும் நிலையி லேயே இந்த இணக்கப் பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை மூலம், இரண்டு ஆண்டு காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்படும் என ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

இதன்மூலம் அனைத்து பணயக்

## வேதியியலுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிப்பு



(சுவீடன்)

ஜப்பான், அவுஸ்திரே லியா, அமெரிக்காவைச் சேர்ந்த இந்த 3 பேருக்கு நோபல் பரிசு பகிர்ந்தளிக் கப்படுகிறது.

உலோக-கரிம கட்டமைப் புகளின் வளர்ச்சி கண்டு பிடிப்பிற்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டு நோபல் பரிசுக் கான அறிவிப்புகள் வெளி யானது. இதில், முதலில் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பின் னர் இயற்பியலுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் 2025ஆம் ஆண்டுக்கான வேதியிய லுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, சுசுமு கிடகாவா, ரிச்சர்ட் ராப்சன், ஒமர்எம் யாகிஆகிய 3பேருக்கு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்காவைச் சேர்ந்த இந்த 3 பேருக்கு நோபல் பரிசு பகிர்ந் தளிக்கப்படுகிறது. உலோக-கரிம கட் டமைப்புகளின் வளர்ச்சிக் கண்டு பிடிப்பிற்காக நோபல் பரிசு 3 பேருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# மதித் திட்டம் மாஸ் இணக்கம் ரவேற்பு

(...ன்) ●●●●●●●●●●●●●●●

... ஹமாஸ் இடையே ...ளை விடுவிப்பதற்கான ... கட்டத்திற்கு, இணக் ...ள்ளதாக அமெரிக்க ...னால்ட் ட்ரம்ப் தெரி




கைதிகளும் மிக விரைவில் விடுவிக்கப்படுவார்கள் எனவும், இஸ்ரேல் தங்கள் இராணுவத்தினை திரும்பப் பெறும் என நம்புவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையிலான சமாதானத் திட்டத்திற்கான முதல் கட்டத்திற்கு இணக்கம் காணப்பட்டுள்ளமையை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வரவேற்றுள்ளார். (நி)

## 15 வயதுக்கு உட்பட்டோர் சமூக ஊடகங்கள் பயன்படுத்தத் தடை

### டென்மார்க் அரசு அதிரடி




(கோபன்ஹேகன்)

குழந்தைகளின் மனநலனைக் காக்கும் வகையில் டென்மார்க் அரசு 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத்தடை விதித்துள்ளது.

உலகம் முழுவதும் குழந்தைகளை சமூக ஊடகங்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப் பல்வேறு நாடுகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் இதேபோன்ற தடையை முன்மொழிந்துள்ளது. சமூக ஊடகங்களால் குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுவதாகத் தொடர்ந்து புகார்கள் எழுந்து வருகின்றன.

இந்நிலையில், டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரெட்ரிக்சன், 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடைவிதிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், சமூக ஊடகங்களும், செல்போன்களும் குழந்தைகளின் குழந்தைப் பருவத்தைத் திருடுகின்றன.

இளைஞர்களிடையே அதிகரித்துவரும் மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் சமூகத் தனிமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

சமீபத்தில் அவுஸ்திரேலிய அரசு 16 வயதுக்கு உட்பட்டவர்கள் சமூக ஊடகங்கள் பயன்படுத்தத் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## எவரெஸ்ட் சிகரத்தில் பனிப்புயல்; சிக்கியவர்களில் 850 பேர் மீட்பு



(மஹாலங்கூர்)

எவரெஸ்ட் சிகரத்தில், கடுமையான பனிப்புயலில் மூன்று நாட்களாக சிக்கியிருந்தவர்களில் 850இற்கும் மேற்பட்ட மலையேற்ற வீரர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தில், எவரெஸ்ட் மலைச் சிகரம் பகுதியில், சமீபத்தில் திடீரெனப் பனிப் புயல் ஏற்பட்டது.

இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலையேற்ற வீரர்கள் அங்கு சிக்கித் தவித்தனர். உள்ளூர் கிராம மக்கள் மற்றும் மீட்புக் குழுவினர் இணைந்து, 580 மலையேற்ற வீரர்கள் மற்றும் 300 வழிகாட்டிகளைப் பத்திரமாக மீட்டனர். (நி)

## ஷேக் ஹசீனாவை கைது செய்ய உத்தரவு



(டாக்கா)

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை கைது செய்ய சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பங்களாதேஷில் அவாமி லீக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, 72. கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடந்த மாணவர் போராட்டத்தில் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவுக்கு தப்பி வந்தார். தற்போது நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பங்களாதேஷத்தில் ஆட்சியில் உள்ளது. பங்களாதேஷத்திற்கு 2026ஆம் ஆண்டு பெப்ரவரியில் பொதுத் தேர்தலை நடத்திட தேர்தல் கமிஷன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

பதவி இழந்து நாட்டை விட்டு வெளியேறிய ஷேக் ஹசீனா மீது ஏராளமான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் ஷேக் ஹசீனா மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் வாக்களிக்கத் தடைவிதித்தும், தேசிய அடையாள அட்டை முடக்கி வைத்தும் தேர்தல் கமிஷன் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை கைது செய்ய சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தின் சிறுவர் தின விழா வெகுவிமர்சையாக அண்மையில் இடம்பெற்றது.

(படம் - சதீஸ்)



பருத்தித்துறை வெளிச்ச வீட்டிற்கு அருகாமையில் தனுசா மரைன் நிறுவனத்தின் அனுசரணையிலும் பருத்தித்துறை நகர சபையின் ஒழுங்கமைப்பிலும் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த 01.10.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது.

(படம் - மகாலிங்கம்)



பருத்தித்துறை ஆத்தியடி சைவமன்ற முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வுகள் முன்பள்ளி வளாகத்தில் முன்பள்ளி பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி.ஜெயமீரா பிரதர்சன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

(படம் - மகாலிங்கம்)



கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய நற்கருணைப் பெருவிழா அண்மையில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

(படம் - யதுபாஸ்கரன்)



யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

(படம் - சுபேசன்)



பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

(படம் - மகாலிங்கம்)




கோப்பாய் பிரதேச செயலக கலை, பண்பாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த விருந்தினர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர் ஈ.தயாளூபன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

(படம் - கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகமானது தென்மராட்சியின் சுகாதாரத்துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக, கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் உள்ளகத் தேவைகளைப் பூர்த்திசெய்ய அண்மையில் சில உதவித் திட்டங்களை வழங்கியுள்ளது.

இதன்போது அவசர சிகிச்சைப்பிரிவின் பரிசோதனைப் பகுதிக்குரிய மறைப் புச்சீலைகள், மருந்தகம், மருந்து கட்டுமிடம் போன்ற பகுதிகளுக்கான பொருட்கள் வைக்கும் தட்டுகள், அலுமாரிகள், வெளிநோயாளர் பிரிவிற்கான அனுமதிச்சிட்டை வழங்கும், ஆவணங்கள் பாதுகாக்கும் அலுமாரியுடன் கூடிய மேசை என்பன வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (8-30)

# புரட்டாதி சனி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் புரட்டாதிச் சனி விரதத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சனீஸ்வர பகவானுக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, விஷேட பூஜை,1008 நாம அர்ச்சனை என்பன நடைபெறும் என ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# நாம் தேடும் செல்வம்

மனிதனுடைய மகிழ்ச்சியான வாழ்க்கைக்குச் செல்வம் இன்றியமையாதது. அச் செல்வத்தை தேடும் முயற்சியில் மனிதனுடைய வாழ்நாளின் பெரும்பகுதி கழிகிறது. அச் செல்வம் இன்று பொருட் செல்வம் என்று பெயர் பெற்றுள்ளது.

ஆனால் பண்டைக் காலத்தில் ஆநிரைகளே செல்வமாகக் கருதப்பட்டன. அந்தச் செல்வத்தைப் பிறர் களவாடும் நிலை இருந்ததையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ள ஆனிரை கவர்தல், ஆகோள் என்ற பெயரால் இவை குறிப்பிடப்பட்டுள்ளன.

பின்னர் பயிர்ச் செய்கைப் பண்பாடு தோன்றிய போது நிலம் செல்வமாகக் கருதப்பட்டது.

எனினும் இச் செல்வங்கள் எல்லாம் நிலையற்றனவாக இருந்தன. பொருட்செல்வம் மனித வாழ்க்கைக்குத் தேவை என்பதால் அதைத் தேடுவதற்குப் பலமுயற்சிகளை மனிதன் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வாறு தேடிய பின்னரும் அதைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. அதனால் பொருட் செல்வத்தால் மனிதன் முழுமையான மகிழ்ச்சியைப் பெற முடியவில்லை.

பொதுவான வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெற மட்டுமே பொருட்செல்வம் துணை நின்றது. எனவே நிலைத்து மனிதனோடு இருக்கக்கூடிய செல்வம் எது என்ற கேள்வி எழுகிறது.

பிறரால் என்றும் கவர முடியாத, பிறருக்குக் கொடுத்தாலும் குறைவுபடாத செல்வம் எது என்பதை வள்ளுவர் வரையறை செய்து பதிவு செய்துள்ளார்.

செல்வம் என்பது குறைவுபடாதிருக்க வேண்டும். ஏனைய செல்வங்களை விடச் சிறந்த செல்வமாக இருக்க வேண்டும். அச்செல்வமே "கேள்வியறிவு" என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"கேள்வி" என்பது கேட்டல் என்னும் செயற்பாட்டால் பெறப்படுவது. "கற்றிலனாயினும் கேட்க" என்பர். ஒருவன் கற்கின்ற வாய்ப்பற்றவனாக இருந்தாலும் கேள்வியறிவால் பலவற்றைத் தெளிவாக அறிய முடியும். ஒருவர் ஒன்றைப் பற்றி எடுத்துரைக்கும் போது அதனைக் கூர்மையாகக் கேட்டு மனதிலே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இது வாய்மொழிக் கல்வி என அழைக்கப்பட்டது. வாய்மொழிக் கல்வியே செவியால் பெறும் செல்வமாகும். இச் செல்வமே தலைசிறந்த செல்வமென வள்ளுவர் விளக்கியுள்ளார்.

செவிச் செல்வம் கருவிகளோ நூல்களோ பயன்படுத்தாமல் நேரடியாகப் பெறும் செல்வமாகும். தமிழர் கல்வி மரபில் வாய்மொழிக் கல்வியே தொடக்கமான கற்பித்தல் நிலையாகவிருந்தது.

பின்னர் ஏட்டுக் கல்வி நடைமுறைக்கு வந்தது. அதன் பின்னர் பொறிமுறைக் கல்வி தோன்றியது. ஏட்டுக் கல்வி கற்பித்தல் நிரையிலே பொருள் தேட்டத்தை வரையறை செய்திருந்தது. ஆனால் பொறிமுறைக் கல்வியோ தொழிற் கல்வி மூலமான பொருள் தேட்டத்தை அறிமுகம் செய்தது.

கருவிக் கையாட்சியும் பொறிமுறை பற்றிய அறிவும் தான் பொருள் தேட்டத்திற்கு உறுதுணையானவை என்ற கருத்தும் வலுப்பெற்றுள்ளது. இன்று செல்வத்தைப் பெற இவற்றின் தேர்ச்சியே இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது.

எனவே " செல்வம்" என்பது "பொருள்" என்ற நோக்கிலே எல்லோராலும் இன்று கருதப்படுகிறது. இளைய தலைமுறை இக் கருத்தை ஏற்றுச் செயற்பட்டு வருகின்றது. ஆனால் பொருட் செல்வத்தைவிட இன்னொரு செல்வமும் மனிதர் தேட வேண்டியது உள்ளது.

அருட்செல்வம் என்னும் செல்வம் வள்ளுவர் விளக்கிக் கூறும் இன்னொரு செல்வமாகும். அருட்செல்வம் செல்வத்துட் செல்வம். ஆனால் பொருட் செல்வம் இழிந்தவரிடத்தும் இருக்கும் செல்வமாகும் என வள்ளுவர் கூறுகிறார்.

இங்கு அருட்செல்வம், பொருட் செல்வம் என இரு வகையான செல்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அருள் என்னும் குணநலம் உடையவரே அருட்செல்வம் உடையவராவார்.

உலகத்திலே உள்ள பிற உயிர்களையும் ஓம்ப வேண்டும் என்ற அருட்குணம் இன்றியமையாதது. அக்குணத்தை வளர்த்துச் செயற்படுபவரே அருட்செல்வம் பெற்று மற்றவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இச் செயற்பாட்டில் பொருட் செல்வமும் அருட் செல்வமும் இணைந்து பயன்பட வாய்ப்புண்டு.

பொருட் செல்வத்தைத் தேட வேண்டும் என்ற குறுகிய மனப்பாங்கை விடுத்து தேடிய பொருட் செல்வத்தை அருட் செல்வத்தோடு இணைத்துப் பயன்படுத்த வேண்டும். அது மனிதனுக்கு விழுமியச் செல்வத்தை நல்கும். செவிச் செல்வமாகப் பெற்ற கல்விச் செல்வத்தைப் பொருட் செல்வம் பெறப்பயன்படுத்தும் இக் காலத்தில் அதை அருட்செல்வமாகப் பயன்படுத்தி மனித விழுமியச் செல்வத்தைத் தேடுவதே நன்று.




# இராசிபலன்

10.10.2025,
புரட்டாதி 24 , வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.47 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 10.59 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32 -12.02 மணிவரை
சாங்கடகர சதுர்த்தி விரதம்

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்-
சித்திரை,சுவாதி.

வில்வன்



யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.



ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை எற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.



ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.



உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.



குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.



திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.



உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்,வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.



வியாபார விரோதம் விலகும், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகமான நாள்.



பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

நகைச்சுவை பக்கவிளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

# குத்தகை கேள்வி அறிவித்தல் - 2026.

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2026 இலிருந்து 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக் கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நியந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்** :- 10.10.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 23.10.2025 பிற்பகல் 02.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி** :- 24.10.2025 பி.ப 10.00 மணிவரை

**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 24.10.2025 பி.ப 10.00 மணி

| இல | குத்தகைவகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய மிகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்** | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (வணிக நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 425,000.00 | 8,501,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 182,000.00 | 3,630,000.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 140,000.00 | 2,805,000.00 |
| 4 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 66,000.00 | 1,320,000.00 |
| 5 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 2,000.00 | 41,000.00 |
| 6 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (இல-02) | 2,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 7 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 9,000.00 | 171,000.00 |
| 8 | கைவேலி மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 66,000.00 | 1,320,000.00 |
| 9 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 32,000.00 | 630,000.00 |
| 10 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை (வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 18,000.00 | 360,000.00 |
| | **உடையார்கட்டு உப அலுவலகம்** | | | |
| 1 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 17,000.00 | 339,000.00 |
| 2 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 28,000.00 | 561,000.00 |
| 3 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 3000.00 | 61,000.00 |
| 4 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 111,000.00 | 2,214,000.00 |
| 5 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 80,000.00 | 1,606,000.00 |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 87,000.00 | 1,738,000.00 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 3,000.00 | 55,000.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 54,000.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 43,000.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 37,000.00 | 732,000.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 22,000.00 | 438,000.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 40,000.00 | 792,000.00 |
| 7 | கற்சிலைமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 6,000.00 | 115,000.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 1,000.00 | 3000.00 |
| | **ஒலுமடு உப அலுவலகம்** | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 2,000.00 | 7,000.00 | 134,000.00 |
| 2 | மாங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 20,000.00 | 402,000.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 14,000.00 | 274,000.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 2,000.00 | 36,000.00 |

**நியந்தனைகள்.**

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.

2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2025.11.03 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சம பங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

4. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக் கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.

5. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடை பாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும்.

6. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு,விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00இற்கு மேற்படாமலும் கட்டணம் (இட வாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00உம் மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டிகள்,ஒவ்வொன்றிற்கும் ரூபா 20.00உம் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு 50.00உம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.

7. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00இற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00இற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00இற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.

8. பொதுச் சந்தையில் மரக்கறி,கடலுணவு வகைகளின் கொள் விலை,விற்பனை விலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.

9. மரக்கறி,கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.

10. கடலுணவு. இறைச்சிவகைகள் விற்பனையில் ஈடுபடுவோர் குறித்த ஆண்டிக்கான மருத்துவ அறிக்கையை தன் வசம் வைத்திருத்தல் வேண்டும்.

11. திருமுறிகண்டி பொது மலசல கூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரியோ அல்லது கட்டணமோ அறவிடக் கூடாது. (கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.)

12. மலசலகூடங்களில் ஏற்படுகின்ற சிறிய திருத்த வேலைகளை குத்தகைக்கு எடுப்பவரே சீர் செய்தல் வேண்டும்.

13. மலசலகூடத்தினை குத்தகைக்கு பெறுபவர் மலசலகூடத்திற்கான மின்சார கட்டண வைப்புப்பணமாக ரூபா 10,000.00 சபையில் வைப்பிலிடல் வேண்டும்.

14. திருமுறிகண்டி கழிப்பறையினை குத்தகைக்கு எடுப்பவர் ஒவ்வொரு வேளையும் தூய்மையாகவும் செம்மையாகவும் வைத்திருக்க வேண்டும் அத்துடன் போதிய மின்சார வசதிகள் ஏற்படுத்தி இருக்கவேண்டும்.

15. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறம், உட்புறம் தூய்மையாக பேணப்பட வேண்டும்.

16. இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக் குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.

17. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி, சுற்று நிருபங்களுக்கு அமைவாகவும், சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.

18. இறைச்சிக் கடைகள் மற்றும் கருவாட்டு கடைகளினை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல்வேண்டும்.

19. கோழி இறைச்சிக்கடை குத்தகைக்காரர்கள் கோழிகளினை உயிருடன் காட்சிப்படுத்தி விற்பனை செய்தல் வேண்டும்.

20. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்பட வேண்டும்.

21. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.

22. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

23. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண்,பெண் மாடுகள், எருமை மாடுகள், ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள், ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

24. பௌர்ணமி தினங்கள், மகா சிவராத்திரி, பட்டிப்பொங்கல் மற்றும் விசேடமாக குறிப்பிடப்படும் தினங்களில் இறைச்சி அறுத்தல்,விற்பனை செய்தல் என்பன முற்றாக தடை செய்தல் வேண்டும்.

25. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும் பொதுவிதிகள் தவிர்ந்த விசேட சலுகைகள் சபை தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படும், தாங்கள் சட்ட வரையறைகளுக்கும் சபைக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

26. அரசினாலும், பிரதேசசபையினாலும் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

27. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**தொலைபேசிஇல:-0212291023**
**email-pkipsmullai@gmail.com.**

2025.10.10 (C-4073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டும் என்பதே உண்மையான போராட்டம். - சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொது அமைப்புகள் குரல் கொடுக்க வேண்டும்

பொது அமைப்புகள் என்பன பொதுமக்களுக்கானவை. ஒவ்வொரு தனி மனிதனும் தனித்தனியாகக் கருத்துக்கூறுவதைவிட, தனி நபர்கள் சேர்ந்து பொது அமைப்பாகத் தங்களை அடையாளப்படுத்தும்போது குறித்த பொது அமைப்புகளின் கருத்துக்கள் - அறிக்கைகள் பொது மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கருத்தாக வெளிவரும்.

எனினும் எங்கள் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய பொது அமைப்புகள் கட்சி சார்ந்த அல்லது சுயநலம் சார்ந்த அமைப்புகளாக இருக்கின்றனவே ஒழிய, அவை பொதுமக்களின் அமைப்புகளாக, பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கின்ற அமைப்புகளாக இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதிலும் சில அமைப்புகள் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வது போல தமது அமைப்புகளுக்குப் பெயர்களை வைத்துள்ளனவேயன்றி, மற்றும்படி அவை தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பொதுப் பிரச்சினைகளுக்காக ஒருபோதும் குரல் கொடுக்கவில்லை.

இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். அதாவது வாகன விபத்துக்களால் நாளாந்தம் உயிரிழப்புகள் நடந்த வண்ணமுள்ளன. அதிலும் டிப்பர் வாகனங்கள் ஏற்படுத்திய விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

இருந்தும் அந்த விபத்துத் தொடர்பில் தமிழ் சிவில் அமைப்புகள் இதுவரை வாய்திறக்கவே இல்லை.

இதுபோல மருத்துவர்களின் அசமந்தம் குறித்தோ, சில சட்டத்தரணிகளின் மோசடிகள் குறித்தோ இந்த அமைப்புகள் கிஞ்சித்தும் அறிக்கை விடவில்லை.

தவிர, போதைப்பொருள் விற்பனை பற்றியோ, மணல் மாபியாக்கள் குறித்தோ இந்த அமைப்புகள் மெளனம் காப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

உண்மை. எங்கள் வடபுலத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய பிரச்சினை கட்டுமானத்துக்கான மண்ணைப் பெற முடியாமையாகும்.

ஆம், ஒரு கட்டமைப்பின் கீழ் மண் விநியோகம் இடம்பெறுமாக இருந்தால், கள்ள மண் என்ற பிரச்சினை அடியோடு நின்றுபோகும்.

இருந்தும் மண் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என அரச அதிகாரிகளுக்கு - அரசாங்கத்துக்கு மகஜர் அனுப்புகின்ற பணியை பொதுஅமைப்புகள் செய்தால்கூட, அரச மட்டத்தில் மண் பிரச்சினை பேசுபொருளாகும். ஆனால் அதுவும் நடந்தாகவில்லை.

இதற்கும் அப்பால், சமகாலத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடிகள் குறித்தோ, பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் பற்றியோ கதைப்பதற்கும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் யாரும் இல்லை என்ற நிலையில், இருக்கக்கூடிய பொது அமைப்புகள் என்னதான் செய்கின்றன? என்ற கேள்வி எழவே செய்யும்.

ஆக, இனிமேலாவது பொதுமக்கள் - தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பொதுப் பிரச்சினைகளுக்காக இங்குள்ள பொதுஅமைப்புகள் ஆழமாகக் குரல் கொடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

# எமது பிள்ளைகளின் பாதுகாப்பையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் உறுதி செய்க

## மனித உரிமை ஆணைக்குழுவில் யாழ்.அரசடி வாழ் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டு மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தமது பிள்ளைகளை அதில் ஈடுபடுமாறு வற்புறுத்திப் பல்வேறு இடையூறுகளை மேற்கொள்ளும் நபரிடமிருந்து தமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்து, பிரதேச வாழ் மக்களது இயல்பு வாழ்வையும் உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு யாழ்.அரசடி வாழ் மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டை நேற்று வியாழக்கிழமை மனிதவுரிமை ஆணைக்குழுவிடம் கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாகப் பல்வேறு சமூகவிரோதக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைக்குச் சென்று வரும் ஒருவர் பின்னணியில் தான் எமது அரசடிப் பகுதியில் வாள்வெட்டு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இவை குறித்துப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனால் நாம் நாளாந்தம் பெரும் துன்பங்களுக்குள்ளாகி வருகின்றோம்.

இந்நிலையில், அண்மையில் அரசடியில் குறித்த சட்டவிரோத நபரால் வெளியூரில் இருந்து சிலர் வரவழைக்கப்பட்டு வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எமது பிள்ளைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

இதில் ஒருவர் காயங்களுக்குள்ளானார். இதைக் காரணமாக வைத்து எமது ஏழு பிள்ளைகளைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

ஆனால் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்நிலையில் தான் எமது பிள்ளைகள் மீது தேவையற்ற வகையில் சோடிக்கப்பட்ட வழக்குகள் பொலிஸாரால் பதியப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியே இன்று (நேற்று) மனித உரிமைக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் என்றும் தெரிவித்தனர். (ம-7,33,104)

## யாழ்.மாவட்டத்தில்

# சிகை அலங்காரத்திற்கான கட்டணம் சடுதியாக அதிகரிப்பு

## பொது மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சிகை அலங்காரத்திற்கான கட்டணம் சடுதியாக அதிகரிக்கப்பட்டமைக்குப் பொதுமக்கள் பலர் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கடந்த 7ம் திகதி சிகை அலங்காரம் செய்வதற்கான தொகை அதிகரிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதில் சடுதியான அதிகரிப்பை ஏற்படுத்தியமைக்குப் பலரும் தமது விசனத்தை வெளியிட்டுள்ளனர்.

கடந்த கால அதிகரிப்பில் முடி வெட்ட மட்டும் 350 ரூபா, சேவ் எடுக்க மட்டும் 250 ரூபா, முடி வெட்டி சேவ் எடுக்க 600 ரூபா எனவும் காணப்பட்டது.

ஆனால் கடந்த 7ம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கூட்டத்தில் முடி வெட்ட மட்டும் 600 ரூபா, சேவ் எடுக்க மட்டும் 350 ரூபா, தாடி ஒதுக்க மட்டும் 500 ரூபா எனச் சடுதியான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த அதிகரிப்பை பொதுமக்கள் பலரும் கண்டித்து தமது விசனத்தை வெளியிட்டுள்ளதுடன் ஆண்டு தோறும் இவ்வதிகரிப்பு நடைபெற்ற வண்ணம் உள்ளது.

பாடசாலைகளில் முடி கொஞ்சம் வளர்ந்திருந்தாலே வெட்ட வேண்டும் என வெளியில் விடுகிறார்கள்.

இதனால் கூலித் தொழிலாளி சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு அனுப்பவே சிரமப்படும் நேரத்தில் இந்த அதிகரிப்பு தமக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது யாழ்.மாவட்டத்தில் உள்ள சங்கங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் சிகை அலங்கரிப்பாளர்களின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இருப்பினும் இது பலருக்கு விசனத்தை ஏற்படுத்துவதனால் அதிகரிப்புத் தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## சங்கானைப் பிரதேச செயலகத்தில் அரசசேவை ஓய்வூதியர் தின விழா

(சங்கானை)

சங்கானைப் பிரதேச செயலகத்தின் அரச சேவை ஓய்வூதியர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 09.00 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வலி.மேற்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் க.இரத்தினேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலகக் கணக்காளர் திருவருட்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் "மூலிகையும் மனித வாழ்வும்" எனும் தலைப்பில் மாகாராஜா ஸ்ரீராஜசேகரா விசேட சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளதுடன், "மூலிகையும் ஆன்மீகமும்" எனும் தலைப்பில் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (3)

## சஞ்சிகை வெளியீடும் நூல் அறிமுகமும்

"சிரஞ்சீவி சஞ்சிகை இதழ் - 2 வெளியீடும் இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வும் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கில் அமைந்துள்ள பூரண நிலையத்தில் காலை 9.30 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் ந.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி வெள்ளி விழாப் பதிவேடான 'பனிமலையில் கூத்தாடிகள்' நூலின் அறிமுகத்தை தவச்செல்வி இராசன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் 'ஈழத்துச் சித்தர்கள்' எனும் ஜேர்மன் மொழியிலான நூலின் அறிமுகம் கபெரியல்லா கிளவுசர் அவர்களால் ஆற்றப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து, 'சிரஞ்சீவி சஞ்சிகை இதழ் - 2' வெளியீடும் "புலம்பெயர் வாழ்வில் நாடகம் ஏன்? எதற்காக?" என்ற தலைப்பில் நாடகம் தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

**20**

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கையர்க்கிடையே பலவிதமான வேற்றுமைகள் உண்டு: அரசியல் விடயமாக ஒத்த கொள்கையுடையவர்களாக அவர்கள் இருக்கவில்லை என்ற பல்லவியை, இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தங்கள் நல்குவதை எதிர்ப்போர் அடிக்கடி பாடிக் கொண்டு, நாட்டின் அரசியல் முன்னேற்றத்துக்கு இடரு கட்டையாக இருந்தனர்.

இலங்கையில் வாழ்ந்த சகல சமூகங்களையும் ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வந்து அதன் மூலமாக இலங்கையின் அரசியல் முன்னேற்ற எதிரிகளின் வாயை அடக்கிச் சீர்திருத்தக் கோரிக்கைகளை ஒருமுகப்படுத்திச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனேயே தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது.

தேசாதிபதியின் யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்து அதற்குப் பதிலாக ஜன நாயக ஆட்சியை இலங்கையில் நிறுவ வேண்டும். சட்ட வாக்கச் சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும். அப்போது தான் ஜனப்பிரதிநிதிகளின் அபிப்பிராயத்துக்கு மதிப்பு உண்டாகும்.

அதாவது சட்ட வாக்கச் சபையில் ஜனங்களின் பிரதிநிதிகள் பெரும்பான்மையினராக இருந்தால், சட்டங்கள் ஆக்கும் அதிகாரம் ஜனங்களிடம் இருந்தே பிறக்கிறது என்றதாகிவிடும். அப்படியான ஓர் சட்டவாக்கச் சபையே அமைக்கப்படல் வேண்டும் என்று தேசிய காங்கிரஸ் தான் ஆரம்பமான நாள் தொடக்கமாகக் கிளர்ச்சி செய்தது.

ஓர் சட்டத்தைப் பற்றி விவாதிக்கவும் கலந்து பேசவும்தான் இதுவரை சட்டவாக்கச் சபையின் அங்கத்தவர்களுக்கு உரிமையிருந்தது. அந்த உரிமை போதாது: ஜனங்களின் செல்வ வளர்ச்சிக்கான சட்டங்களை ஜனப்பிரதிநிதிகளே இயற்றவும் அவர்களுக்கு அதிகாரம் வேண்டும் என தேசியக் காங்கிரஸ் கேட்டது.

அரசாங்கம் சட்ட வாக்கச் சபை அங்கத்தவர்களை நியமிப்பதையும், வகுப்புவாத முறையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் முறையையும் தேசியக் காங்கிரஸ் கண்டித்தது.

நல்லாட்சிக்கும் நீதியான பரிபாலனத்துக்கும் இப்படியான வகுப்பு வேற்றுமைகள் தான் சாவுமணியடிப்பன என்று அரசாங்கம் சொல்லிக் கொண்டு, அதே சமயத்தில் வகுப்பு வேற்றுமைகளை வளர்க்கும் ஓர் முறையைக் கைக் கொள்ளுதல் ஏற்றதாகாது என்று காங்கிரஸ் எடுத்துக்காட்டி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அம்முறையே சாலச்சிறந்த முறை என்றும் தெருட்டியது.

பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையினால் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களதும் நலவுரிமைகள் ஒன்றாகக் கவனிக்கப்படும் பல்வேறு பிரதிநிதிகள் தங்கள் தங்கள் பிரதேச நலவுரிமைகளை எடுத்துக் காட்டி அவற்றை விருத்தியாக்க வழிவகை தேட முடியும்.

அத்துடன் ஜனங்கள் தாம் சிங்களவர், தாம் தமிழர் முஸ்லிம்கள் என்று வகுப்பு வாரியாக நினைப்பதை ஒழித்து எல்லாரும் ஓர் நாட்டின் மக்களே என்ற மனப்பான்மை கொள்ள பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை தூண்டும் என்றும் அதிகாரிகளுக்கு காங்கிரஸ் விளக்கியது. அரசியற் சீர்திருத்தத்தைப் பெறுவதற்காக ஓர் தூதுக் கோஷ்டி இங்கிலாந்துக்குச் சென்றது. இதன் தலைவர் பிரபல நியாயவாதியாக இருந்த எச். ஜே. ஸ்ரீ. பெரேரா என்பவர்.

இலங்கை மக்களின் கோரிக்கையை பெரேரா குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்த வைக்கவுன்ற் மில்னர் என்பவருக்கு ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார். குடியேற்ற நாட்டு மந்திரியும் பிரிட்டிஷ் அரசாங்கமும் இலங்கையின் கோரிக்கையை நன்முக ஆலோசித்த பின்னர் புதிய அரசியற் சீர்திருத்த மசோதா ஒன்றினைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இங்கே அனுப்பினர்.

இது நிகழ்ந்தது. 1920ஆம் ஆண்டில் ஆகும். ஆனால் 1920 ஆம் ஆண்டின் அரசியற் சீர்திருத்தத்திலும் தேசாதிபதிக்கிருந்த அதிகாரங்கள் கிஞ்சித்தும் குறையவில்லை.

சட்ட நிருவாக சபையிலே உத்தியோகப் பற்றற்ற மூவர் அங்கம் வகிக்க இச்சீர்திருத்தம் இடம் அளித்தது. சட்டவாக்கச் சபை, சட்ட நிருவாக சபை என்ற இரண்டு சபைகளுக்குமிடையே ஓர் தொடர்பு ஏற்படுத்துவதற்காகவே இவ்வங்கத்தவர்கள் சட்ட நிருவாக சபையில் இருந்தனர்.

சட்டவாக்கச் சபையில் 14 உத்தியோக அங்கத்தவர்களும் 23 உத்தியோகப் பற்றில்லாதவர்களுமாக 37 பேர் அங்கம் வகிக்கலாம் என்றும் இச்சீர்திருத்தத்தின் பயனாக ஏற்பட்டது. இதுவே மனிங் அரசியலமைப்பு ஆகும்.

**மனிங் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு (1921-1924)**

(தற்காலிக) மனிங் அரசியலமைப்பு: இலங்கையில் 1921 முதல் 1924 வரை அமுலிலிருந்த மூன்றாவது அரசியலமைப்பு இதுவாகும்.

1920இல் இலங்கைச் சட்டவாக்கச் சபை மனிங் ஆணைக் குழுவினால் மேலும் மறுசீரமைக்கப்பட்டு, அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21இல் இருந்து 37 ஆக அதிகரிக்கப்பட்டதோடு பதவிநிலை பெறா அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10இல் இருந்து 23 ஆக அதிகரிக்கப்பட்டது.

அதில் 7 அங்கத்தவர்கள் (கண்டிச் சிங்களவர் -2, இந்தியத் தமிழர் -1, முஸ்லீம் -1, விஷேட ஈடுபாடுகளுக்கு அங்கத்தவர்கள் -3) ஆளுநரால் நியமிக்கப்பட்டதோடு மற்றவை 11 ஆட்புல/பிரதேச ரீதியான (territorial) தேர்தல் தொகுதிகள் கொண்ட 16 தேர்தல் மாவட்டங்களாக திருத்தியமைக்கப் பட்டு மிகுதி 16 அங்கத்தவர்களும் (மேல் மாகாணம் -2 கொழும்பு -1 ஏனைய 8 மாகாணங்களுக்கும் (1இன் படி) -8, பறங்கியர் -1, ஐரோப்பியர் -2, தாழ்நில உற்பத்திகள் சங்கம் -1, வர்த்தக சங்கம்-1) தெரிவு செய்யப்பட்டார்கள்.

மனிங் ஆணைக் குழுவின் பரிந்துரையின் படி தெரிவு செய்யப்படக் கூடிய சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் = 13 :3 :1

சட்டவாக்கச்சபையின் 16 தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்

**குழுமம் சார் விஷேட தேர்தல் தொகுதிகள்**

(1) ஐரோப்பியர் தேர்தல் தொகுதி (நகரம்)
(2) ஐரோப்பியர் தேர்தல் தொகுதி (கிராமம்)
(3) வர்த்தக தேர்தல் தொகுதி
(4) பறங்கியர் தேர்தல் தொகுதி
(5) தாழ்நில உற்பத்திகள் சங்க தேர்தல் தொகுதி

**ஆட்புல (territorial) தேர்தல் தொகுதிகள்**

(6) மேல் மாகாணம் (பிரிவு -அ) தேர்தல் தொகுதி,
(7) மேல் மாகாணம் (பிரிவு -ஆ) தேர்தல் தொகுதி,
(8) கொழும்பு பட்டினம் தேர்தல் தொகுதி,
(9) மத்திய மாகாணம் தேர்தல் தொகுதி,
(10) வட மாகாணம் தேர்தல் தொகுதி,
(11) தென் மாகாணம் தேர்தல் தொகுதி,
(12) கிழக்கு மாகாணம் தேர்தல் தொகுதி,
(13) வடமேல் மாகாணம் தேர்தல் தொகுதி,
(14) வட மத்திய மாகாணம் தேர்தல் தொகுதி,
(15) ஊவா மாகாணம் தேர்தல் தொகுதி
(16) சப்பிரகமுவ மாகாணம் தேர்தல் தொகுதி.

(மூலம் : -1920-09-23 திகதியிடப்பட்ட இலங்கை வர்த்தமானி அறிவித்தல் இல.7130 )

முன்னர் "படித்த இலங்கையர்" என்பவர்களுக்கேயிருந்த வாக்குரிமை 1920ஆம் ஆண்டு அரசியற் சீர்திருத்தத்தின் பயனாக மேலும் பலர்க்கு வழங்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அணையா...

செம்மணியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்குத் தூபி நேற்று விசமிகளால் அடித்து நொருக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி மீதான இருள் நீங்கவும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு சர்வதேச நீதி கோரியும் யாழ்ப்பாணத்தின் செம்மணிப் பகுதியில் "அணையா விளக்கு" போராட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

அதன் விளைவாக அணையா விளக்குத் தூபியும் அமைக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த தூபி சேதமாக்கப்பட்டுள்ளது.

சேதப்படுத்தப்பட்ட இவ் அணையா விளக்குத் தூபியை மீண்டும் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7,33,104)

## அனலைதீவு...

பிரதிநிதிகள், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் ஆளுநரை நேற்று வியாழக்கிழமை மதியம் ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்ப சுகாதார பராமரிப்புச் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் 2024 - 2028 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் 9 மாகாணங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கு அமைவாக வடக்கு மாகாணத்துக்கு 2026ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாயும் 2027 மற்றும் 2028ஆம் ஆண்டுகளுக்கு தலா 750 மில்லியன் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் மேம்படுத்தப்படவுள்ளன.

ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்படும்போது காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கும் உள்ள மாறுபடுகளைக் கருத்தில் கொண்டு அவற்றை தற்காலத்துக்கு ஏற்றவாறு மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான வடக்கு மாகாண சபையின் ஒத்துழைப்பை உலக வங்கிப் பிரதிநிதிகளும் திட்டத்தின் பிரதிநிதிகளும் கோரினர். அத்துடன் இந்தத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கே முதலாவதாக பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஆளுநர் உறுதியளித்தார். (ம-7)

## மருத்துவர்...

கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த ஆறு வருடங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் சி.ஜமுனாநந்தா இடமாற்றம் பெற்றதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று கௌரவிக்கப்பட்டார். (ம-7)

## அரியாலையில்...

அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரியாலை மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை நல்லூர்ப் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனத்தில் குறித்த இடத்திற்குக் கழிவுகளைக் கொண்டு வந்தபோது அவர்களின் வாகனத்தை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் அங்கிருந்தவர்களோடு பேச்சுக்களை நடத்தி இந்த முறை வாகனத்தை அனுமதிக்குமாறு கோரியதையடுத்து வாகனத்தை செல்ல மக்கள் அனுமதித்தனர்.

இந்நிலையில் யாழில் உள்ள பிரபல தனியார் தங்குமிடத்தினர் அப்பகுதியில் உள்ள தமது காணி ஒன்றில் கழிவுகளைக் கொண்டுவந்த போது அவர்களின் வாகனத்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடாவடியில் ஈடுபட்டு பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனக் குற்றம் சாட்டி 8 பேரைக் கைது செய்துள்ளனர். (ம-7)

## பாராளுமன்றில்...

இலங்கையின் பல் மத சக வாழ்வை அடையாளப்படுத்தும் வகையில் நவராத்திரி விழா பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நேற்றுப் பாராளுமன்றத்தில் கொண்டாடப்பட்டது. (ம-7)

## நெடுந்தீவில்...

வியாழக்கிழமை (9) காலை மன்னார் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு திணைக்கள அதிகாரிகள் பதிவு நடவடிக்கைகளுக்கு பின்னர் நேற்று மாலை (9) மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 23ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-7,33,285)

## ஈஸ்...

குண்டுவெடிப்புத் தாக்குதல்களுக்குப் பின்னணியில் உள்ள சூத்திரதாரி யார்? என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரணைகளை சீர்குலைக்க மறைமுக வழிகளில் முயற்சிப்பவர்களை அவ்வாறு செய்ய அனுமதிக்கக் கூடாது என்று அமைச்சர் கூறினார். (ம-7)

## புலோ...

படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித் துறை பிரதான வீதியில் பயணித்த முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் அச்சுவேலியைச் சேர்ந்த செல்வகுமார் மகாலிங்கம் (வயது-54) மற்றும் குடத்தனை மேற்கைச் சேர்ந்த பாலசுரேஸ் ஜதுசன் (வயது-25) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர். (ம-7,60)

## குருக்கள்...

ப்பட்டுள்ளது.

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணி முபாறக் முஅஸ்ஸம் உட்பட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 5977
Z 3 8 0 4 7 3
அத சம்பத
Z 0 4 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 552

சுப தவசக்
திகதி 2025.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 0083
இடபம் 12 14 36 45

தன நிதானய
திகதி - 2025.10.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2007
O 11 23 42 63 O

மெகா பவர்
திகதி 09/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2325
C 23 10 17 52 72

ஜய ஜய
திகதி 2025.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 0245
N 5 7 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4219
சீட்டிழுப்பு திகதி | 09.10.2025
V 07 21 65 68
V

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 1286
கடகம் 02 24 28 42 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.10.2025 வெற்றி வாரம் 0685
ஆங்கில எழுத்து R
7 8 4 2 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,024,704.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2951
சீட்டிழுப்பு திகதி 2025.10.09 தினம் வியாழக்கிழமை
28 52 62 71 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,928,022.40

சனிதா
திகதி 09.10.2025 வெற்றி வாரம் 5112
47 61 70 72 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,371,720.40
ரூ. 50,000/- பணப்பரிசு
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 0787
சீட்டிழுப்பு திகதி 09.10.2025
வியாழக்கிழமை
06 20 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி அதிர்ஷ்ட
சீட்டிழுப்பு வாரம் 4663
சீட்டிழுப்பு திகதி 09.10.2025 தினம் வியாழக்கிழமை
12 24 37 44 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,117,191.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 12 09 10 37 41
2127
09.10.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.599,064,479.60

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2777
சீட்டிழுப்பு திகதி : 2025.10.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,272,187.20
21 27 28 52 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சவாலை இலங்கை எதிர்கொள்ளும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



தற்போதைய வேகத்தில் அரசாங்கம் பயணிக்குமானால் இலங்கை 2028ஆம் ஆண்டு கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தில் பாரிய பொருளாதார சவாலை எதிர்கொள்ளும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் புதிய IMF நிபந்தனைகளின் கீழ் ஒரு புதிய கடன் மறுசீரமைப்பு ஏற்பாடு பற்றி குறிப்பிடப்பட்டாலும், நடைமுறையில் முந்தைய நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்ட அதே ஒப்பந்தம் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணத்தை 33% குறைப்பதாக அளித்த வாக்குறுதிகள் 9,000 ரூபாய் கட்டணத்தை 6,000 ரூபாவாகவும், 3,000 ரூபாய் கட்டணத்தை 2,000 ரூபாவாகவும் குறைத்தல் தொடர்பான விடயம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அதே நேரத்தில் கட்டணங்கள் இப்போது மீண்டும் 6.8% உயரும் என்றும் பிரேமதாச குறிப்பிட்டார்.

சரியான செலவு பகுப்பாய்வு இல்லாமல் அரசாங்கம் இத்தகைய முடிவுகளை எடுப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

159 இடங்களின் பெரும்பான்மை இருந்தபோதிலும் அரசாங்கம் IMF இன் ஒவ்வொரு தாளத்திற்கும் நடனமாடுகிறது. மக்கள் மாற்றத்திற்காக வாக்களித்தனர் - IMF இயக்கும் அதே பாதையில் இயங்குவதற்காக அல்ல என்று அவர் கூறினார். (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 08 - 1938



மறைவு
09 - 10 - 2025

## Dr. நாகமுத்து சின்னத்தம்பி (RMO)

### (ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி நாகமுத்து சின்னத்தம்பி அவர்கள் நேற்று *(09.10.2025)* வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் மீனாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நல்லதம்பி, காலஞ்சென்ற வல்லிபுரம், காலஞ்சென்ற இராசம்மா, காமாட்சி, சுந்தரம், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற சின்னம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற தங்கம், பூமகள், லெட்சுமி, நாகம்மா, சொர்ணம்மா, ஜானகி, காலஞ்சென்ற இராமநாதன், காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் யசோதரா, வாசுகி, சுமதி (அமெரிக்கா), சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தகுமார், இளங்குமரன், முளுக்கன் (அமெரிக்கா), நவநீதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவின், பிரணவி, சோபியா, நாதவர்ஷன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.10.2025 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

K.K.S வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம். (5624)

*தகவல் : குடும்பத்தினர்*
077 959 0592, 077 967 2735

## தேசிய...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (9) நடைபெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஒவ்வொரு காலகட்டத்திலும் அரசாங்கங்கள் ஐ.நா. தீர்மானங்களுக்கு வெவ்வேறு கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளன. சில நேரங்களில் இந்த அரசாங்கங்கள் இந்தத் தீர்மானங்களை ஆதரித்து அவற்றில் பங்காளிகளாகவும் மாறிவிட்டன (2015, 2017,2019) மற்ற சந்தர்ப்பங்களில், அதிகாரத்தில் உள்ள அரசாங்கங்கள் தீர்மானங்களில் வாக்களித்துள்ளன. (2012, 2013, 2014, 2021, 2022).ஏனைய சந்தர்ப்பங்களில், இலங்கை அரசாங்கம் இலங்கை மீது ஒரு தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளது. மற்ற சந்தர்ப்பங்களில், அதிகாரத்தில் உள்ள அரசாங்கங்கள் தீர்மானங்களில் வாக்களிக்கவில்லை, மேலும் தீர்மானங்களின் சில பிரிவுகளை மட்டுமே எதிர்த்தன.

இந்த அனைத்துத் தீர்மானங்களிலும் இரண்டு பொதுவான புள்ளிகள் தெளிவாகத் தெரிகின்றன. முதலாவது, ஜெனிவாவில் இந்த செயல்முறையின் அடிப்படையிலான தேசிய பிரச்சினைகள் எந்த முந்தைய அரசாங்கத்தாலும் முறையாக நிர்வகிக்கப்படவில்லை. இந்தத் தீர்மானங்கள் 16 ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமைகள் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான முக்கிய காரணம் இதுதான். எந்தவொரு போரிலும் மனித உரிமைகள் பிரச்சினைகள் எழுகின்றன என்பது அனைவருக்கும் தெரியும்.

நாடுகள் பலவற்றில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பிரச்சினைகள் அவற்றின் சொந்த தேசிய கட்டமைப்பு நிறுவனங்கள் மூலம் தீர்க்கப்படுகின்றன. தேசிய ஒற்றுமையை மேலும் ஊக்குவிக்கின்றன. ஆனால் நம் நாட்டில் முந்தைய அரசாங்கங்கள் என்ன செய்தன? தேசிய மட்டத்தில் உரிமைகள், பிரச்சினைகளைத் தீர்த்து ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அவர்கள் இனவெறி, பாலின வேறுபாடு மற்றும் ஏனைய பிரச்சினைகளை ஏற்படுத்தினார்கள்.

நாட்டைப் பிரித்தனர், அனைத்து இனங்கள் மற்றும் மத மக்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தினர், மீறினர், மேலும் இலங்கையை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படாத நாடாக மாற்றினர். ஜெனிவா தீர்மானத்தின் பரிணாம வளர்ச்சியைப் பார்த்தால் இது தெளிவாகின்றது என்றார். (ம-7)


## "சிரஞ்சீவி சஞ்சிகை இதழ் - 2 வெளியீடும் நூல்கள் அறிமுகமும்"

நாள் : 11.10.2025, சனிக்கிழமை, காலை 9.30
இடம் : பூரண நிலையம் (ஊரெழு கிழக்கு, ஊரெழு.)
தலைமை : திரு. ந. சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்)

❖ பனிமலையில் கூத்தாடிகள்:
(சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி வெள்ளிவிழா பதிவேடு)
அறிமுகவுரை தவச்செல்வி இராசன்

❖ ஈழத்துச் சித்தர்கள்
(ஜேர்மன் மொழியிலான நூல் அறிமுகம்
- கபெரியல்லா கிளவுசர்)

❖ சிரஞ்சீவி சஞ்சிகை வெளியீடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூரண நிலையம் - யாழ்.ஊரெழு. (5622)

## A/L - 2025 மாணவர்களுக்கான...

N.BABU ஆசிரியரின்

புவியியல் கருத்தரங்கு

> ஒக்ரோபர் - 11, 12, 13, 14 ஆம் திகதிகளில்
> ஆரம்பம் - 11.10.2025 சனி 11 a.m
> வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P : 077 936 5087

## வாகன சாரதி தேவை

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் இயங்கிவருகின்ற பிரபல்யமான விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றிற்கு இலகுரக மற்றும் கனரக வாகனசாரதி தேவை.
முன் அனுபவம் இருத்தல் அவசியம்
தொடர்புகளுக்கு :
077 583 3045, 077 078 3289 (5623)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4077)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4077)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.